விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 11 சனிக்கிழமை (28.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 304

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மக்களின் அவலங்கள் குறித்தே பேச்சின்போது விவாதிக்கப்படும்



## இளந்திரையன் தெரிவிப்பு

(லண்டன்)

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் மனித அவலங்கள் குறித்தே இன்று அரசுடன் நடைபெறும் நேரடிப் பேச்சில் விவாதிக்கப்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.ஏ-9 பாதையைத் திறத்தல் குறித்தே முக்கியமாகக் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மழை அனர்த்தத்தால் நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் பரவலாகப் பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் 13 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இவ் அனர்த்தத்தினால் நால்வர் உயிரிழந்ததாகவும் அந்நிலையம் தெரிவித்தது. பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கு, வடமத்திய, ஊவா மேற்கு மற்றும் தென்மாகாணங்களில் காலை வேளைகளில் மழை பெய்யுமென காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## வாகரையில் தாக்குதல்

(கிளிநொச்சி)

வாகரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியை நோக்கிய இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்த மற்றும் கரடிக்குளம் இராணுவ முகாமில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களுடன் திருகோணமடு பகுதிவழியாக நேற்றுக் காலை 7.30 மணியளவில் வலிந்ததாக்குதல்களை மேற்கொண்டனர்.

திருகோணமலைப் பிரதேச தமது படையினர் இந்த வலிந்த தாக்குதலை காலை 9.30 மணியளவில் முறியடித்தனர் என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வாகரைப் பிரதேசத்தின் உள்ளே இருக்கும் கட்டுமுறிவை இலக்கு வைத்து இந்த நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார். (சு-5)

# பேசும் விடயங்கள் குறித்து இன்றே தீர்மானிக்கப்படும்!

## பாலித கோகன்ன தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையில் என்ன பேசப்படவுள்ளது என இன்றைய சந்திப்பின் போதே தீர்மானிக்கப்படும் என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்தார்.

பேசப்படும் விடயங்கள் குறித்து முன் கூட்டியே எதுவும் முடிபு செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார.

(04 ஆம் பக்கம் பார்க்க)





தமிழ்மக்கள் எதிர்நோக்கும் மனித அவலங்கள் குறித்தே இன்று அரசுடன் நடைபெறும் நேரடிப் பேச்சில் விவாதிக்கப்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார். ஏ-9 பாதையைத் திறத்தல் குறித்தே முக்கியமாகக் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

இதேவேளை யாழ்ப்பாணத்தில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கு, வடமத்திய, ஊவா மேற்கு மற்றும் தென்மாகாணங்களில் காலை வேளைகளில் மழை பெய்யுமென காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (சு)

# பேசும் விடயங்கள் குறித்து இன்றே தீர்மானிக்கப்படும்!

## பாலித கோகன்ன தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையில் என்ன பேசப்படவுள்ளது என இன்றைய சந்திப்பின் போதே தீர்மானிக்கப்படும் என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்தார்.

பேசப்படும் விடயங்கள் குறித்து முன் கூட்டியே எதுவும் முடிபு செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## வாகரையில் தாக்குதல்

(கிளிநொச்சி)

வாகரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியை நோக்கிய இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்த மற்றும் கரடிக்குளம் இராணுவ முகாமில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களுடன் திருகோணமடு பகுதிவழியாக நேற்றுக் காலை 7.30 மணியளவில் வலிந்ததாக்குதல்களை மேற்கொண்டனர்.

திருகோணமலைப் பிரதேச தமது படையினர் இந்த வலிந்த தாக்குதலை காலை 9.30 மணியளவில் முறியடித்தனர் என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வாகரைப் பிரதேசத்தின் உள்ளே இருக்கும் கட்டுமுறிவை இலக்கு வைத்து இந்த நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார். (சு-5)

## ஆவரங்காலில் நேற்று கிளைமோர் இரண்டு இராணுவத்தினர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்-பருத்தித்துறை வீதியில் ஆவரங்காலில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து நேற்றுக் காலை 10 மணிக்கு இக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த இரு இராணுவத்தினர் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதனையடுத்து ஆவரங்கால் பகுதியில் பெருந்தொகையான (04 ஆம் பக்கம் பார்க்க)

## மினி சினிமா திரையரங்கின் உரிமையாளர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கன்னாதிட்டி வீதியில் மினி சினிமா திரை யரங்கு உரிமையாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள அவரின் திரையரங்குக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாத ஆயுததாரிகளினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கொல்லப்பட்டவர் கஸ்தூரியார் வீதி கன கசபை அவனியூவில் வசித்துவரும் ஒரு பிள்ளையின் தந்தையான வீரசிங்கம் சந்திர மோகன் (வயது 42) என்ற (04 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மக்களின் அவலத்தை போக்க ஜெனீவாப் பேச்சில் நடவடிக்கை எடுங்கள்

## அரசு-புலிகளிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பாரிய மனித அவலத்திற்கு முகம் கொடுத்து வரும் யாழ்.குடாநாட்டு மக்களை அதிலிருந்து விடுவிக்க நிபந்தனையின்றி உடனடியாக ஏ-9 பாதையைத் திறந்து விடவேண்டுமென அரசு -விடுதலைப்புலிகளை யாழ்.மறைமாவட்ட நீதி,சமாதானத்திற்கான ஆணையம் வேண்டிக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு; ஜெனீவாவில் இன்றும் நாளையும் இடம் பெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபெறும் இருதரப்பினருக்கு பின்வரும் வேண்டுகோளை யாழ்.மறைமாவட்ட நீதி சமாதானத்திற்கான ஆணையம் முன்வைக்கிறது.

இந் நாட்டில் இடம் பெறும் வன்செயல் அனைத்தும் உடனடியாக முடிபுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இச் சமாதான முன்னெடுப்பை தமது நலனுக்காக குழப்ப முனையும் அனைத்துக் குழுக்களையும் அனுமதிக்காதிருத்தல்,

பாரிய மனித அவலத்திற்கு முகம் கொடுத்து வரும் யாழ்.குடாநாட்டு மக்களை விடுவிக்க நிபந்தனையின்றி (04 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் அதிபர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் இன்று நடைபெறவிருந்த தபாலதிபர் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது காலவரையறை இன்றி இப் பரீட்சைக்கான புதிய அனுமதி அட்டைகள் புதிய திகதி குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே... குருப்பெயர்ச்சி
(12 ராசிகளுக்குமான பலன்கள் உங்கள் வலம்புரியில் தொடர்ந்து வரும்)

## இறைமணி இராசரத்தினம் நேற்றுக் காலமானார்



(யாழ்ப்பாணம்)

முதுபெரும் கவிஞரும் எழுத்தாளருமான இறைமணி சி.இராசரத்தினம் நேற்றுக் காலமானார். வேணைகிழக்கைச் சேர்ந்த இவர் ஆசிரியர், அதிபர், சமூக சேவையாளர், விவசாயி, வைத்தியர், சமாதான நீதிவான், கவி ஞர், பேச்சாளர் என பலதுறைகளிலும் பிரகாசித்தவர்.

பல் துறை ஆளுமைமிக்க இவர், ஒரு கவிஞராவார். இவரது கவிதைகள் இறைமணி என்ற புனைப்பெயரிலும் சொந்தப் பெயரிலும் நீண்ட காலமாக ஈழகேசரி, இந்துசாதனம், சோதிட பரிபாலினி, வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகி பாராட்டுப் பெற்றவை.

இவர் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இ.சிவச்சந்திரனின் தந்தையாவார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று காலை 10மணிக்கு இல.121, 2ஆம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது. (சு)

## அந்நிய சக்திகளின் சதி வலையில் ஜனாதிபதி மகிந்த சிக்கியுள்ளார்

### ஜே.வி.பி.சாடல்

அந்நிய சக்திகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் வலையில் மகிந்த ராஜபக்ஷ சிக்கிக் கொண்டார் என்று ஜே.வி.பி. சாடியுள்ளது. மகரகமவில் நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மாநாட்டில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுவின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச பேசியதாவது;

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்நிய சக்திகள் விரித்த வலையில் மகிந்த ராஜபக்ஷ சிக்கிக் கொண்டுள்ளார். இத்தகைய தவறான நடவடிக்கைக்காக அவர் வருந்துவார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைத்தும் ஜெனீவாப் பேச்சுக்களில் பங்கேற்க வைத்தும் மகிந்தவை இரு முனைகளிலும் அந்நிய சக்திகள் வளைத்து விட்டன.

சுதந்திரக் கட்சியுடனான ரணிலின் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப்பின்னால் மறைமுகத் திட்டம் உள்ளது. மகிந்தவை ஆதரிக்கும் தேசிய சக்திகளுக்கும் அரசாங்கத்திற்கும்இடையே பிரச்சினையை ஏற்படுத்தவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மின்சார சபை,பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இதன் மூலம் விரைவில் தனியார் மயமாக்கப்பட்டு விடும்.

விடுதலைப்புலிகளுக்குச் சொல்லும் வழியில் சொன்னால்தான் புரியும் என்று சம்பூர்த் தாக்குதலின் போது சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் கூறிய மகிந்த இப்போது ஏன் ஜெனீவாவுக்குப் பேச்சுவார்த்தைக் குழுவை அனுப்பியுள்ளார் என்றார் விமல் வீரவன்ச.(ச–5)

## க.பொ.த.உயர் தர பெறுபேறுகள்

*யா/நயினாதீவு மகாவித்தியாலயம்*

*கலைப் பிரிவு*

ப.சுவர்ணலதா 3ஏ, வா.திரியாம்பிகை 3ஏ, க.சுஜாதா 2ஏ பி, வி.விஜியதீபா ஏ 2பி, அ.ஶ்ரீராகவன் 2ஏ சி, க.சுரேஸ்கரன் ஏ பி சி, சோ.கமல்ராஜ் ஏ பி சி, ப.ஜீவநந்தா ஏ பி சி, ப.சசிகலா 2பி சி, க.லோகேஸ்வரி 2பி எஸ், வீ.புஷ்பராசா பி 2சி, த.அஜந்தரூபன் பி 2சி, க.பிரியதர்ஷினி பி 2சி, ம.அமல்ராஜ் 3சி, க.அனுஷா 3சி, தி.பத்மலோஜினி 3சி, த.சரிதினி 3சி, க.கமலலோஜினி 3சி. (சு)

## சட்டவல்லுநர்களுடன் விடுதலைப்புலிகள் ஆலோசனை

ஜெனீவா சென்றடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவினர் அமெரிக்க, அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த சட்டவல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தினர். ஜெனீவாவில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அமெரிக்க நியூயோர்க் நகரைச் சேர்ந்த சட்டத்தரணி விஸ்வநாதன் உருத்திரகுமார், அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் மனுவேற்பிள்ளை போல் டொமினிக் ஆகியோருடன் ஜெனீவா சென்றுள்ள விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவினர் ஆலோசனை நடத்தினர். (சு)

## பாகிஸ்தானை 124 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வென்றது

தென்னாபிரிக்காவின் வேகப் பந்து வீச்சாளர் கூட்டணியின் சிறப்பான பந்து வீச்சில் பாகிஸ்தான் 124 ஓட்டங்களால் தோல்வியுற்றது. மினிஉலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் பிரிவு பியைச் சேர்ந்த பாகிஸ்தான் தென்னாபிரிக்க அணிகள் நேற்று மொகாளியில் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு நிலையில் 5 விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்கள்என்ற இக்கட்டிலிருந்த தென்னாபிரிக்காவை மார்க்பௌச்சர் மற்றும் கேம்ப் ஆகியோரின் சிறப்பான பிரிக்க முடியாத 131 ஓட்டங்களால் மீண்டது. இதில் துடுப்பாட்டத்தில் மார்க் பௌச்சர் 69 ஓட்டங்களையும் கேம்ப் 64 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் லிப்திக்கார் அன்யும் 2விக்கெட்டுக்களையும் அப்துல்ரசாக் மற்றும் மொகமெட் ஹபீஸ் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 214 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி மக்கயா நிற்னியின் வேகப் பந்து வீச்சில் 25 ஓவர் களில் சகலவிக்கெட்டுக்களையும்இழந்து 89 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதில் துடுப்பாட்டத்தில் ஜசீர்அரபாத் 27 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் சோபிக்கத் தவறிவிட்டனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மக்கயா நிற்னி 5விக்கெட்டுக்களையும் லங்ஜீவாடி 3 விக்கெட்டுக்களையும் ஷேன் பொலக் 2 விக்கெட்டுக்களையும்வீழ்த்தினர். எனவே இந்த வெற்றியுடன் தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்கு இலகுவாக முன்னேறியது. (ச–5)

# குருப் பெயர்ச்சி

## விருச்சிகம்

*விசாகம் 4–ம் பாதம், அனுஷம், கேட்டை*

முயற்சி திருவினையாக்கும் என்ற வாசகத்தை என்றும் நினைவில் நிறுத்தி அதன்படியே செயல்படும் விருச்சிக ராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் இருந்த குருபகவான் இப்போது உங்கள் ராசிக்கே பெயர்ச்சியாகி ஜென்ம குருவாக இடம் பெற்றுள்ளார்.

ராசியில் இருந்து 5,7,9–ம் பார்வையாக பூர்வ புண்ணிய , களஸ்திர , பிதா ஸ்தானத்தை பார்க்கிறார். குரு ராசியில் இடம் மாறுவதால் மன வலிமையும் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கின்ற ஆற்றலும் உருவெடுக்கும்.

உங்கள் பேச்சை யார் கேட்பார்களோ அவர்களிடம் பேசுவதால் மட்டுமே பலன் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சூழ்நிலை நிலவும். சகோதரர்கள் கடந்த கால செயல் தயக்கங்களை விடுத்து மீண்டும் ஒத்துழைப்புத் தருவர்.

சமூக அந்தஸ்து உயரும். வீடு, மனை, வாகன வகையில் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் இனிதே நடைபெறும். தாயின் அன்பும் ஆசியும் கூடுதல் நம்பிக்கையைத் தரும். புத்திரர்கள் நல்ல பழக்க வழக்கங்களை பின்பற்றி பெற்றோருக்கு மன மகிழ்ச்சியும் நற்பெயரும் பெற்றுத் தருவார்கள்.

இஷ்ட, குலதெய்வ அருளும் பூர்வ புண்ணிய நற்பலமும் குருபார்வையால் கூடுதலாக கிடைக்கும். பூர்வ சொத்தின் வளர்ச்சி, பராமரிப்பு போன்றவற்றில் நற்பலன் உண்டு. எதிரிகள் தீங்கு விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டாலும் தெய்வ பலம் உங்களைக் காக்கும்.

கணவன், மனைவி ஒற்றுமை குருபார்வை பலம் பெறுவதால் ஒற்றுமையாக இருக்கும். நம்பகம் நிறைந்த புதிய நபர்கள் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகும். சுக சவுகர்ய வாழ்க்கை வசதி நிறைவாகக் கிடைப்பினும் அதில் அளவான ஆர்வம் மட்டுமே இருக்கும்.

தந்தை வழி உறவினர்கள் உங்களின் கருத்துக்களை மதித்து ஆலோசனை கேட்டு பெறும் நன்னிலை உருவாகும். தொழில் சார்ந்த வகையில் கூடுதல் வளர்ச்சி பெற புதிய மாற்றமும் தெய்வ வழிபாடும் தகுந்த துணை நிற்கும்.

வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொழில் பயண வாய்ப்பு இனிதே நிறைவேறும்.

*குரு வக்கிரகாலப் பலன்*

*05.04.07 முதல் 27.08.07 வரை*

ராசிநாதன் செவ்வாய்க்கு குரு நட்புக் கிரகமாகி செவ்வாய் வீட்டில் வக்ரம் பெற்றதால் தன்பலம் குறையமாட்டார். செயல்படுத்திய காரியங்களில் குழப்பநிலை வந்து விலகலாம். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க மனம் விரும்பும்.

வயிறு தொடர்பான பிணிகளுக்கு தகுந்த சிகிச்சை முறை செய்து உடல் நலம் பெறுவீர்கள். துஷ்டர்களின் சகவாசத்தை விலக்குவதால் நன்மையுண்டு.

பொருளாதார வரவு வளமாகவிருக்கும். குடும்ப மகிழ்ச்சி வளரும். பெண்கள் தொடர்பான விஷயங்களில் கவனமாகவிருக்கவும். புத்திரர்களின் விருப்பத்தை அறிந்து தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

கணவன், மனைவி ஒற்றுமை அன்பும் பண்பும் கலந்திருக்கும்.

*தொழில் அதிபர்கள்*

மருத்துவமனை நடத்துவோர், சூரிய ஒளி அடுப்புத் தயாரிப்போர், மின்சார சாதனம், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள், பெற்றோல், டீசல், பைங்க் நடத்துவர்கள், பாயிலர் தொழிற்சாலை, கனரக இயந்திர வடிவமைப்பு, சாலைகள், பாலங்கள் கட்டும் ஒப்பந்தக்காரர்கள், பொறியியல் கல்லூரி நடத்துபவர்கள் கடும் போட்டியைச் சமாளித்து வெற்றி பெறுவர்.

மற்றவர்களுக்கு அதிக போட்டியிராது. இவர்கள் தங்கள் தொழிலில் பிறர் வியக்கும் வண்ணம் தனிமுத்திரை பதிப்பார்கள். உங்களுடன் ஒத்துழைப்புத் தருபவர்களிடம் மட்டும் நேரத்தைச் செலவிட்டால் பணவரவை இருமடங்காக்கலாம். தொழிற்சாலை அபிவிருத்திப் பணிகள் நல்ல விதமாக நடக்கும்.

உங்கள் புத்திரர்களை நிர்வாகத்தில் ஈடுபடுத்தினால் அறிவுபூர்வமாகச் செயற்பட்டு உங்களுக்கு உதவியாகவிருப்பார்கள். வெளியூர் வியாபாரத் தொடர்புகள் வளர்ச்சி பெறும்.

*பணியாளர்கள்*

அரசு மற்றும் தனியார் அலுவலகப் பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனமாகப் பின்பற்றி நடக்க வேண்டும். நிர்வாகத்தினர் உங்கள் மீதான நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொள்ள கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

பணி இலக்குகளை தாமதமின்றி நிறைவேற்றினால் அதற்குரிய பலன் உடனடியாகக் கிடைக்கும். சக பணியாளர்கள் தரும் ஆலோசனையின் பின் விளைவுகளைச் சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

இயந்திரங்களை இயக்கும் பணியாளர்கள் அவ்வப்போது சோதித்து இயக்குவதால் பொருள் இழப்பு எதுவும் வராமல் தவிர்க்கலாம். மின்சாரம் தொடர்பான பணியில் உள்ளவர்கள் தங்கள் பாதுகாப்புடன் பிறர் பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவதால் நன்மையுண்டு.

அலுவலகம் தொடர்பான அலைச்சல்கள் அதிகமாகி சில அனுபவங்களைப் பெற்றுத் தரும். கவனமாகச் செயற்படவும்.

*வியாபாரிகள்*

மின்சாதனங்கள், ஜவுளி, பலசரக்கு, உணவுத் தானியங்கள், பூஜைப் பொருள்கள், பித்தளை பாத்திரங்கள், விளையாட்டுச் சாதனங்கள், எழுது பொருள்கள், இரசாய உரங்கள், விவசாய இடு பொருள்கள், நர்சரி ஹார்டன் நடத்துபவர்கள், காகிதப் பொருள்கள், கட்டடக் கட்டுமானப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்து, விவசாயப் பொருள்கள் விற்பவர்கள் கடும் போட்டியைச் சந்திக்க வேண்டி வரும்.

இருப்பினும் எதிர்வரும் சவால்களுக்கு முறியடித்து வியாபார வளர்ச்சி காண்பீர்கள். மற்றவர்களுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் ஆர்வம் பிறக்கும். இதை மிகக் கவனத்துடன் செயற்படுத்தினால் மட்டுமே நன்மையுண்டு.

பணியாளர்கள் நன்றி மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்கள். தகுதிக்கேற்ற பணச் செலவை மேற்கொள்ளவும். குடோன்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதால் நன்மையுண்டு.

*மாணவர்கள்*

தொழில் நுட்பப் பயிற்சி, கண் மருத்துவம், மனநல மருத்துவம், மின்சாதன வடிவமைப்பு மற்றும் பழுது நீக்குதல், சினிமாத் துறை சார்ந்த பயிற்சி,தொழிற்சாலைப் பாதுகாப்பு, சமையல் கலை, இரசாயன உரம், இயற்கை உரம் தயாரிப்பு, மலைவள ஆராய்ச்சி, மின் அணு சாதன வடிவமைப்பு, வானியல் விமானத்துறை, விவசாயத்துறை மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் படிப்பதால் மட்டுமே நல்ல தரத்தேர்ச்சி பெறமுடியும்.

படிப்புக்குத் தேவையான முக்கிய செலவுகளுக்கு முக்கியத்துவம்தந்து விட்டு மற்ற செலவுகளை மேற்கொள்ளுங்கள். தாமதித்தால் பணத்தட்டுப்பாடு ஏற்படலாம்.சக மாணவர்கள் துர்ப்போதனை செய்யலாம்.கவனம் வேண்டும்.

நல்லவர்களை மட்டுமே பின்பற்றுங்கள். தந்தை, மகன் உறவு நிலை சிறப்பாகவிருக்கும். தெய்வ நம்பிக்கை வளர்ந்து சமூக பணியிலும் ஆர்வம் வரும்.

*பெண்கள்*

அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களிடம் இருக்கும் செயல்குறைபாடுகளைக் கண்டறிந்து உத்வேகத்துடன் பணிபுரிவதால் மட்டுமே நிர்வாகத்திடம் நற்பெயர் கிடைக்கும்.

சக பணியாளர்களின் வழிகாட்டல்கள் நல்லதாகவிருந்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள். பண வரவு நார்மல்தான். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் பணத் தட்டுப் பாட்டை சந்திக்கலாம். வருமானத்துக்கு ஏற்ப செலவுகளைத் திட்டமிட்டு செலவழிப்பது நல்லது.

தாய் மாமனார் வழியில் சீர் பெறும் யோகம் உங்கள் குழந்தைகளுக்கு உண்டாகும். உறவினர்கள் நட்பு மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்கள். புத்திரப் பேறு விரும்புவர்களுக்கு குருவருளால் நற்பலன் உண்டு.

ஆடை, ஆபரண சேர்க்கையுண்டு. சுய தொழில், கூட்டுத் தொழில் செய்யும் பெண்கள் சந்தையில் போட்டியை முறியடிக்க புதிய யுத்திகளைப் பின்பற்ற வேண்டும். சிலருக்கு தொழிலில் இடமாற்றம் ஏற்படலாம்.

**ஜோதிட மாமணி சங்கர்ஜி**

*அரசியல்வாதிகள்*

மக்கள் பணியில் உற்சாகத்துடன் செயற்பட்டால் கூட குறைகள் வர வாய்ப்பிருக்காது. கடந்தகாலப் பணச் சேமிப்பை உங்கள் வளர்ச்சிக்காக செலவிடும்போது முக்கிய தேவைகளை அறிந்து நடப்பது நல்லது.

இளைய சகோதரர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். ஆதரவாளர்களை தக்க வைக்க அதிகம் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படும். புத்திரர்களின் நற்பணியால் புகழ் அதிகமாகும். எதிரிகளின் இரகசியத் திட்டங்களை முன்னமே அறிந்து முறியடிக்கும் வாய்ப்பு தெய்வ அருளால் கிடைக்கும்.

*விவசாயிகள்*

காய்கறி, கீரை, வெற்றிலை, கிழங்கு வகைகள் உற்பத்தி செய்பவர்கள் கடுமையாகப்பாடுபட வேண்டும். பொதுவாக எப்பயிராயினும் கூடுதல் உழைப்பினால் மட்டுமே நல்ல மகசூல் கிடைக்கும். பண வரவு ஓரளவு இருக்கும்.

கால்நடைகள் பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். வாய்க்கால் வரம்புப் பிரச்சினைகள் தீர்வதில் தாமதம் உண்டாகும்.

*பரிகாரம்*

கிருஷ்ணரை வழிபடுவது மன வலிமையையும் செயல் வெற்றியையும் தரும்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றியான்.

—திருக்குறள்

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுப் பஞ்சத்தைப் போக்குங்கள்

பாணுக்கு வழியில்லை என்று முறையிட்ட மக்களிடம் பாண் இல்லை என்றால் கேக்கைச் சாப்பிடுவதுதானே என்று பதிலளித்த காதை போல யாழ்ப்பாணத்து மக்களின் நிலைமை உள்ளது.

ஐந்து முதல் ஆறு இலட்சம் வரையான மக்கள் வாழும் யாழ்.குடாநாட்டில் உணவுப் பஞ்சம்தலை விரித்தாடுகிறது. கப்பலில் எடுத்து வரப்படும் உணவுப் பொருள்கள் போதுமானதல்ல.

ஐம்பது கிராம், நூறு கிராம் என்ற அளவுத்திட்டத்திலேயே அவற்றை வழங்க முடியும். இந்நிலையில் கொழும்பிலிருந்துவிமானம் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் யாழ்ப்பாணத்திற்குஎடுத்து வரப்பட்டுள்ளன.

அதி தேவைப்பாடான மருந்துப் பொருள்களை விமானம் மூலம் எடுத்து வருவது ஓர்மனிதாபிமான நடவடிக்கை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அதற்காக நுளம்புத்திரியை விமானத்தில் கொண்டு வருவது அதன் தேவையை நிவர்த்தி செய்வதற்கு போதுமானதாவென ஆராய வேண்டும்.

ஆறு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட யாழ்.குடாநாட்டுக்குக் கப்பலில் கொண்டு வந்த பொருள்கள் போதாது என்பதால் விமானத்தில் நுளம்புத்திரி போன்ற பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எப்படியிருக்கிறது எம் நிலைமை?

அது சரி, விமானம் மூலம் கொண்டு வரப்பட்ட பொருள்கள் விநியோகிக்கப்பட்டனவா? அவ்வாறாயின் யாருக்கு, எந்தப் பங்கீட்டு அடிப்படையில் அவை விநியோகிக்கப்பட்டன என்ற கேள்வி பொதுமக்களிடம் இருந்து எழுவது நியாயமானதே.

யாழ்.குடாநாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை விமானம் மூலம் அனுப்பி வைத்துள்ளோம் என்று கூறுவதால் மக்களின் தேவை பூர்த்தியடைந்து விடமாட்டாது.

மாறாக எடுத்து வரப்பட்ட பொருள்கள் மக்களுக்குப் போதுமானதா? அவை ஒழுங்கான முறையில் விநியோகிக்கப்படுகின்றதா? என்ற கேள்விகளை எழுப்புதல் அவசியமாகும்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்குப் பின்னர் இன்று வரை குடாநாட்டு மக்கள் உணவுப்பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதிலும் ஏழைக்குடும்பங்கள் படும்பாடு பெரும் பரிதாபத்துக்குரியது. யானை விலை, குதிரை விலை என உணவுப் பண்டங்கள் கறுப்புச் சந்தையில் விற்பனையாகும்போது ஏழைகள் என்ன செய்ய முடியும்?

கூடவே ஏ-9பாதை மூடப்பட்டதால் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்தும் குடும்பங்களின் நிலையை அரசு ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏழைப்பிள்ளைகள் பசிதாளாது அழுகின்ற கண்ணீரைத் துடைப்பதுஅனைவரினதும் தலையாய கடமையாகும்.

பாதையைத் தடுத்து வைத்துப் பஞ்சத்தை தலைவிரித்தாடச் செய்வதால் எந்த நன்மையும் கிடையாது என்பது உணரப்பட வேண்டிய உண்மை.

# பொறுப்பான எதிர்க் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி செயற்படும்

## அதன் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாகக் கைபொப்பமிட்ட போதிலும் பொறுப்புள்ள எதிர்க் கட்சி என்ற நிலையை கைவிடப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஆறு விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது. எனினும் எதிர் கட்சி என்ற வகையில் அரசின் குறைபாடுகளை சுட்டிக்காட்ட பின்நிற்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்அவர்இக்கருத்தை தெரிவித்துள்ளார். இவ் ஒப்பந்தம் குறித்து ஜே.வி.பி. விமர்சனம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ச)

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பேச்சுக்கள் மீண்டுமொரு சந்தர்ப்பம்

## மனித உரிமைகள் அவதானிப்புக் குழு கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் கட்டுமீறிய மனித உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கும் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கும் மீள ஆரம்பிக்கும் பேச்சுவார்த்தை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தையளிக்கின்றது என்று மனிதஉரிமைகள் அவதானிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்துமனித உரிமைகள் அவதானிப்புக் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இந்த ஆண்டு பாரியளவில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இரு தரப்பினராலும் கட்டவிழ்க்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் ஆகியவை தொடர்பாக தனது ஆழ்ந்த அக்கறையை மனித உரிமைகள் அவதானிப்புக் குழு இக் கடிதங்களில் வெளிப்படுத்தியுள்ளது.

துரிதமாக முடுக்கிவிடுப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள் சர்வதேச சட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசர தேவையை இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் உணர்த்துகின்ற அதேவேளையில் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்தி இது விடயத்தில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறும் இரு சாராரையும் தூண்டுகின்றன என மனித உரிமைகள் அவதானிப்புக்குழுவுக்கான ஆசிய இயக்குநர் பிராட் அடம்ஸ் இக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# தபால் நிலையங்களுக்கு முன் அலைமோதும் மக்கள் வெள்ளம்

## கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பில் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனையிலுள்ள தபால் நிலையங்களுக்கு முன்னால் மக்கள் வெள்ளம்அலைமோதுவதாக தெரியவருகின்றது. அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் அலைமோதுவதாக இங்கிருக்கும் நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் அவற்றுக்காக அல்ல. யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவுகளுக்கு அத்தியாவசியப் பொருள்களைப் பொதி செய்து அனுப்புவதற்காகவே அவர்கள் தபால் நிலையங்களுக்கு முன்னால் அலைமோதுகின்றனர்.

அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக தபால் ஊழியர்கள் பல்வேறு நடைமுறைகளைப் பின்பற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெதுப்பகங்களில் பாணுக்குக் கியூ, பால்சாலையில் பாலுக்குக் கியூ, கூட்டுறவுச் சங்கங்களின் முன் கியூ என பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ். மக்கள் கியூவிலேயே தமது பொழுதைக் கழிக்கின்றனர்.

இந்நிலையில் குடாநாட்டில் உள்ள உறவினர்களுக்கு சீனி, பால்மா , பிஸ்கட் உட்பட அத்தியாவசியப் பொருள்களை பார்சலில் அனுப்புவதற்காக வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை பகுதி தபால் நிலையங்கள் முன் கியூவில் காத்து நின்று பொதிகளை அனுப்புவதாக தெரியவருகின்றது.

அவ்வாறு அனுப்பியவர்கள் யாழ்.பிரதம தபால் நிலைய அதிபருக்கு தொலைபேசி மூலம் தாங்கள் அனுப்பிய பார்சல் வந்து சேர்ந்து விட்டதா? என அடிக்கடி விசாரிப்பதாகவும் யாழ்.தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-133)

# விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் 31 ஆம்திகதி காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர்பிரிவு ரீதியாகவும் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 49 சிறந்த விவசாயிகளுக்கு இக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

# கல்விமாணி பிரவேச பரீட்சை யாழ்.இந்துவுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான கல்விமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பிரவேசப் பரீட்சை இன்று யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது.

இப் பரீட்சை முன்னர் யாழ்.வேம்படி உயர் மகளிர்கல்லூரி, திருக்குடும்பக்கன்னியர் மடம் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் நடைபெறவிருந்தது. எனிலும் திடீரென்று யாழ்.இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்.கல்வி வலய மட்டத்திலான தமிழ்த் தினப்போட்டி நாளை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-133)

# ஐந்தாம் கட்ட நிவாரணம் நேற்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நேற்று ஐந்தாம் கட்ட நிவாரண விநியோகம் ஆரம்பமானது. இதன் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான ஓகஸ்ட் மாத நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாக அச்சங்கத்தின் தலைவர் எஸ்.கணநாதன் தெரிவித்தார்.

மேலும் நான்காம் கட்ட விற்பனையில் விநியோகிக்கப்பட்ட நானாவிதப் பொருள்களான வெள்ளைப்பூடு, மல்லி, சவர்க்காரம்(லைபோய், சன்லைட்), தேங்காய்எண்ணெய் மற்றும் தீப்பெட்டி என்பவற்றைப் பெற்றுக் கொள்ளாத தமது சங்கத்தின் பாவனையாளர்களுக்கு அவை இன்று வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை செத்தல் மிளகாய், லக்ஸ் சோப், சேவ்எக்ஷல், பற்பசை மற்றும் றவ்வை என்பன மிக விரைவில் வழங்கப்படும் எனவும் யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-5,133)

# மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேசசெயலகப் பிரிவில் உள்ள கீழ்க் குறிப்பிடப்படும் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த, இதுவரையும் இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் பெறாத குடும்பங்களுக்கு இன்று சனிக்கிழமை தொடக்கம் கீழ்க் குறிப்பிடப்படும் எரி பொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெய் விநி யோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவரையும் மண்ணெண்ணெய் பெறாத குடும்பங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

*01.மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலையம்*

றெக்கிளமேசன் கிழக்கு(ஜே/68), றெக்கிளமேசன் மேற்கு (ஜே/69), குருநகர்கிழக்கு(ஜே/70), குருநகர் மேற்கு(ஜே/71), சின்னக்கடை (ஜே/72), யாழ்.நகர்கிழக்கு(ஜே/74), சுண்டுக்குளி தெற்கு(ஜே/75), சுண்டுக்குளி வடக்கு(ஜே/76).

*02. மாக்பெட் எரிபொருள் நிரப்பு நிலையம்*

யாழ்.நகர் மேற்கு (ஜே/73), மருதடி (ஜே/77), அத்தியடி (ஜே/78), சிறாம்பியடி (ஜே/79), பெரியகடை(ஜே/80), கோட்டை(ஜே/81), வண்ணார்பண்ணை(ஜே/82), கொட்டடி(ஜே/83). (ச)



நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற சூரசங்காரத்தினை படத்தில் காணலாம்
(படம் திலீவின்பன்)

# மக்கள் நிம்மதியுடன் வாழவேண்டி நாளை சர்வமத பஜனை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட நீதி,சமாதான ஆணையமும் ,திருமறைக் கலாமன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வமத பஜனை வழிபாடு நாளை மாலை 3 மணிமுதல் 4.30 மணிவரை இல. 128 டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்றத்தின் கலைக்கோட்டத்தில் இடம் பெறவுள்ளது.

'உரிமையில் முகிழும் சமாதானம் நோக்கி' எனும் தொனிப்பொருளில் இடம் பெறவுள்ள இந்த சர்வமத பஜனை வழிபாடு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்செயல், கோரக்கொலைகள்,கொள்ளைகள்,காணாமல் போதல்,மனித உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை ,பயம் ,பீதி, இடப்பெயர்வு ,அகதிவாழ்வு,பட்டினிச்சாவு போன்றவை இம் மண்ணை விட்டு முற்றாக ஒழியவும், மனித மாண்பு, கௌரவத்துடன் தமிழ் மக்கள் தம் மண்ணில் நிம்மதியுடன் வாழவும் வழிசமைக்க இறைவனிடம் உரத்துக் குரல் கொடுப்போம்.ஆன்மிக சக்தி பலம் பொருந்திய ஆயுதம். இதில் அணி திரண்டு நம்பிக்கையுடன் வேண்டுவோம் என்றுள்ளது.

சர்வமதங்களின் தலைவர்களும் பங்குபற்றவுள்ள இந்த பஜனை வழிபாட்டில் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# ஏ-9பாதை திறக்கப்படா விட்டால் பேச்சுக்கான வாய்ப்புக்கள் இல்லை

## தயா மாஸ்டர் ரொய்ட்டருக்கு பேட்டி

(கிளிநொச்சி)

யாழ்.ஏ-9பாதை திறக்கப்படுவதை நிராகரித்தாலோ அல்லது பாதையைத் திறக்க மறுத்தாலோ தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயாமாஸ்டர் தெரிவித்துள்ளார்.

ரொட்டர் செய்தி நிறுவனத்திற்கு கிளிநொச்சியில் இருந்து தொலை பேசியூடாக அவர் தெரிவித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

மனிதாபிமான பிரச்சினைகளின் கீழ் பிரதானமாக இருப்பது ஏ-9 பாதை திறப்பு. யாழ். ஏ-9 பாதை திறக்கப்படுவதை நிராகரித்தாலோ அல்லது பாதையைத் திறக்க மறுத்தாலோ தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

நாங்கள் மனிதாபிமானப் பிரச்சினைகளை பேசுவோம் என்கிறோம்.அரசாங்கத் தரப்போ அரசியல் விவகாரங்களைப் பேசுவோம் என்கின்றனர்.

ஆகையால் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் இல்லை. காத்திருந்து பார்ப்போம் என்றார் தயா மாஸ்டர்.

ஜெனீவாவில் உள்ள பெயர் குறிப்பிட விரும்பாத அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த ஒருவரே எல்லாவற்றையும் இரண்டு நாட்களில் விவாதித்து விட முடியாது.பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் இறுதி செய்யப்படவில்லையென்று தெரிவித்தார் என ரொய்டர் தெரிவித்தது. (ச-5)

# இரு இளைஞர்களின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் இரு இளைஞர்களின் உடல்கள் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன.

திருகோணமலையின் வடக்குப் பகுதியில் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செல்வநாயகபுரம் 3 ஆம் மைல் கட்டைப் பகுதியில் இந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

அடையாளம் தெரியாத நபர்களால் இரு இளைஞர்களும் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்று அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டோர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இதனிடையே திருகோணமலையின் வடக்குப் பகுதியில் 42 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள திரியாய் கிராமத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.ஒக்ரோபர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் இச் சம்பவம் நடந்துள்ளது.(ச-5)

# நானாவிதப் பொருட்களை வழங்கக்கோரி கூட்டுறவுச் சங்கம் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாசையூர் பாவனையாளர்கள் நேற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சகல கிளைகளிலும் நானாவிதப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட போதும் தமக்கு அதனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் அவற்றை வழங்கவேண்டுமெனக் கோரியே அவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குக் கிடைக்கப்பட்ட பொருட்கள் எல்லைக்குட்பட்ட 30 ஆயிரம் குடும்பங்களுக்கு போதுமானது இல்லை எனவும் இதனால் பொருட்கள் கிடைக்கப்பெற்றதும் வழங்கப்படுமெனவும் யாழ்.கூட்டுறவுச் சங்கத்தினர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதியளிக்கப்பட்டதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ச-5)

# ஊடகவியலாளர்களை பாதுகாக்க அரசு தொடர்ந்தும் செயற்படும்

## தகவல் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படும் சம்பவங்களை அரசாங்கம் கண்டிப்பதாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பில் வீரகேசரிப் பத்திரிகை எரிக்கப்பட்டதை கண்டிப்பதாக தெரிவித்துள்ள அரசாங்கம் அது குறித்து விசாரணைகளை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல் சம்பவங்களில் பயங்கரவாதக் குழுக்களும் ஜனநாயகத்திற்கு அப்பால் பட்ட குழுக்களுமே ஈடுபடுவதாக கருதவேண்டியுள்ளதென அரசு தெரிவித்துள்ளது.

மக்களுக்கு தகவல்களை வழங்கும் முழுமையான சுதந்திரம் ஊடகங்களுக்கு உள்ளதாகவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.ஊடக சுதந்திரம்தொடர்பில் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் பாது காப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் செயற்படும் என்றும் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தபால் அதிபர்...

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கான வினாத்தாள்கள் வந்து சேராமையினாலேயே அப் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை வினாத்தாள்கள் திருகோணமலையில் தேங்கிக் கிடப்பதாகவும்பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-133)

## ஆவரங்காலில்...

இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் யாழ்-பருத்தித்துறை வீதியில் இரண்டு மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## யாழ்ப்பாண...

உடனடியாக ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்படல்,

போர் நிறுத்த உடன்பாடு ஒப்பந்தத்தின் உள்ளீடு மிக இறுக்கமாக பின்பற்றப்படவும் இது எதிர்கால சமாதான பேச்சுவார்த்தைக்கு உறுதியான அடித்தளமாக அமைய வேண்டும்.

ஒருவர் ஒருவருக்கு நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி ஆழமான நல்லிணக்கம்,ஒப்புரவை உருவாக்கல்,

நான்கு வருட பேச்சுவார்த்தை நகர்வு தமிழர் மேலும் ஏமாற்றப்பட்டு துன்பியலின் உச்ச விலை கொடுத்த காலம், காலம் தாழ்த்தாது உடனடியாக தீர்வுகள் எட்டப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப ஆவன செய்யப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை இரு தரப்பினரும் ஏற்று செயற்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மினி சினிமா...

குடும்பஸ்தரே ஆவார்.

சம்பவ இடத்திற்கு சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## மக்களின் அவலங்கள்...

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கூட ஏ-9 பாதையைத் திறப்பது குறித்து எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அரசு,விடுதலைப்புலிகள் வரி வசூலிப்பதற்காகவே ஏ-9 பாதையைத் திறக்கக்கோருகிறார்கள் என்ற சாட்டுப்போக்கை கூறி வருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்ட போது அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டே ஏ-9 பாதை திறப்பு இடம் பெற்றது.

ஆனால் தற்பொழுது முன்னுக்குப் பின் முரணான காரணங்களைக் கூறிக்கொண்டு பாதையைத் திறக்காமல் மக்களை மனித அவலத்திற்குள் தொடர்ந்து வைத்திருப்பதற்கான கருத்துக்களையே அரசு கூறி வருகின்றது என்றார்.

ஜெனீவாப் பேச்சுக்கும் வரிவிதிப்பிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. தற்பொழுது இடம் பெறுவது மோசமான அவலம் மருந்துத் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் என்பன இல்லாத நிலையில் மக்கள் வாழ்கின்றனர்.

முதலில் கவனிக்கப்படவேண்டியது அல்லல் பட்டுள்ள மக்களுக்கு ஒரு நிவாரணம் என்றார். முதலில் மனித அவலம் குறித்தே முக்கியத்துவம் கொடுக்கப்படும் எனவும் ஏனைய விடயங்கள் குறித்து பின்னர் விவாதிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள ஜெனீவாப் பேச்சுக்களின்போது மக்களுக்கு சமாதானத்தின்பால் நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்றசூழல் உருவாகும் என இளந்திரையன் நம்பிக்கை தெரிவித்தார்.(ச)

## பேசும் விடயங்கள் குறித்து...

இன்று பேசப்படும் விடயங்கள் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். நாங்கள் கூடிப்பேசி என்ன விடயங்கள் குறித்து பேசவேண்டும் என முடிபு செய்வது தான் நோக்கம்.

அதுதான் இன்று நடைபெறும் என்றார் பாலித கோகன்ன. சமாதானப் பேச்சில் இரண்டு தரப்பினர் உள்ளனர். ஒன்று அரசு; மற்றையது விடுதலைப்புலிகள்.

இரண்டு தரப்பினருமே தங்களுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகின்றனர். அதேபோன்று ஒரு தரப்பு மற்றைய தரப்பு கூறுவதைக் கேட்க வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை யுத்தத்தை முடிபுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே நோக்கம். அதற்காக இறுதித் தீர்வைக் கொண்டுவருவது குறித்துப் பேசவேண்டும் அதனை விடுத்து சிறிய சிறிய விடயங்கள் குறித்துப் பேசி நேரத்தை வீணடிக்கக் கூடாது. சண்டையை முடிபுக்குக் கொண்டு வந்து மக்கள் அமைதியாக வாழ வழி செய்ய வேண்டும் என்றார்.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை குறித்து நம்பிக்கை இருக்கின்றது. இரு தரப்பும் வந்திருக்கிறார்கள் ஜெனீவாப் பேச்சுக் குறித்து மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பு இருக்கிறது.

இதில் ஏதாவது முடிபு வரும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதேபோன்று நல்லதொருமுடிபு ஏற்படும் என தான் நம்புவதாக கோகன்ன நம்பிக்கை வெளியிட்டார்.

ஏ-9 பாதை திறப்பதென்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையல்ல. நாங்கள் கடந்த 25 ஆண்டுகளாக இருக்கும் பிரச்சினையை முடிபுக்கு கொண்டுவருவது குறித்தே பேசுவோம். அதைவிடுத்து வேறு பிரச்சினைகள் குறித்து பேசுவதென்பது தீர்வுக்கு வழிவகுக்காது என்றார் அவர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.